# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**O.S.No.2/2023**

PW1– ராஜேந்திரன் நாள்.16.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

தாவா 1வது அயிட்ட சொத்தும், 7வது அயிட்ட சொத்தும் பக்கம் பக்கம் இணைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களில் 2முதல் 5 பிரதிவாதிகள் அவர் அவர்களுக்குரிய பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், மீதியுள்ள பாகம் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கிரையம் கொடுத்தது போக எனக்கு ஒதுக்கப்பட்ட பாகத்திற்கு தனிப்பட்ட முறையில் வா.சா.ஆ.2 பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் என்னுடைய குடும்ப சொத்துக்கள் என்று காட்டுவதற்கு கணினிபட்டா அல்லது UDR பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் நிலப்பட்டா மட்டும் தாக்கல் செய்துள்ளேன். மற்ற பட்டாக்கள் தாக்கல் செய்யவில்லை. சாட்சி தானாக தான் அரசுபணியில் இருந்ததாலும், 1ம் பிரதிவாதி நிர்வாகத்தில் இருந்ததாலும் நான் பட்டா சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுகிறார். 8ம்அயிட்ட இலக்கமான சர்வே எண்.430/1 எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்தம்பி மற்றும் தாயார் குடியிருந்தார்கள் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் 1978ம் ஆண்டில் திருச்சியில் தனியார் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன். 1980ம் ஆண்டு பெரம்பலூரில் மின்சாரவாரியத்தில் பணியில் சேர்ந்தேன். நான் பணியில் சேர்ந்த பின்னர் குடும்பத்திற்காக பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு பணம் கொடுத்ததற்கு எழுத்து பூர்வமான ஆதாரம் இல்லை. நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளதுபோன்று வேலைஇல்லாத சமயத்தில் கடையில்போய் வேலை பார்க்கவில்லை என்றால் ஆலோசனை கூறுவேன். நான் தான் குடும்பத்தில் மூத்த மகன். 1ம் பிரதிவாதி 2வது மகனாவர். 1ம் பிரதிவாதி குடும்ப சொத்துக்களை

நிர்வாகம் செய்யவில்லை என்றும், அவர் குடும்ப கர்த்தாவாக எந்த காலத்திலும் செயல்படவில்லை என்றால் சரியல்ல. நான் வேலைக்கு சென்று சம்பாதித்த பணத்தை நானாக வைத்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. 13.10.2025ம் தேதி என்மகன் வினோத்குமார் பெயருக்கு என்னிடம் காட்டப்படும் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் நகல் **பி.வா.சா.ஆ.1**, அந்த சொத்திற்கு என்மகன் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கணினி பட்டா நகல் **பி.வா.சா.ஆ.2**, அது என்னிடம் காட்டப்படுவதாகும். பி.வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்டில் கண்ட சொத்தை நான் கிரயம் வாங்கிய பத்திரத்தின் நகல் தான் என்னிடம் காட்டப்படுவதாகும். அது **பி.வா.சா.ஆ.3**, சாட்சி தானாக மகன்களின் வருமானத்தை வைத்து வாங்கப்பட்டதாக கூறுகிறார். என்மகன்களின் வருமானத்தை வைத்து மேற்படி சொத்து வாங்கப்பட்டதாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது தாவா சொத்து அல்ல. நான் வேலைக்கு சென்று தனியாக வருமானம் ஈட்டி என்னுடைய வருமானம் முழுவதும் வைத்து நான் தனிப்பட்ட முறையில் என்பெயரில் சொத்துக்களை வாங்கினேன் என்றால் சரியல்ல. என்மனைவி பெயர் கலைச்செல்வி ஆவார். என்மனைவி பெயரில் உள்ள மாடியுடன் உள்ள வீட்டின் சொத்தின் கூட்டுப்பட்டா நகல் என்னிடம் காட்டப்படுவதாகும். அது **பி.வா.சா.ஆ.4**, என்மனைவி வேலைபார்க்கவில்லை என்றால் சரியல்ல. டெய்லரிங் தொழில் செய்கிறார். தனியாக கடைவைத்து டெய்லரிங் தொழில் செய்யவில்லை. அருகில் இருப்பவர்கள் கொடுப்பதை வைத்து டெய்லரிங் வேலை செய்வார். என்மனைவி பெயரில் உள்ள வீடுஅவருடைய பூர்விகசொத்து அல்ல. அவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்தாகும். என்னுடைய வருமானத்தை வைத்து என்மனைவி பெயரில் மேற்படி சொத்தை கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வருமானத்தை வைத்து நான் சுமார் 20 வீடுகள் வரை வாங்கி அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்பெயரிலும் மற்றும் என்மனைவி பெயரில் வாங்கப்பட்ட

சொத்துக்கள் இந்த வழக்கில் தாவா சொத்துக்களாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 1987ம் ஆண்டில் கனரா வங்கியில் நகை மதிப்பீட்டாளராக சேர மனு செய்தார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கனரா வங்கி நகைமதிப்பீட்டாளராக இருந்தார் என்றால் சரிதான். அவர் நகைமதிப்பீட்டாளராக இருந்தபோது அவருக்கு வருமானம் வந்தது என்றால் சரிதான். வங்கியில் கமிசன் கொடுப்பார்கள். அந்த கமிசன் பணம் அவருடைய தனிப்பட்ட வருமானம் என்றால் சரியல்ல. அவர் குடும்பத்தை விட்டு தனியாக இல்லை. அவருடைய உடல் உழைப்பால் அவருடைய வருமானம் வந்தது என்றால் சரியல்ல. நிர்வாகம் அவரிடம் இருந்தது. நான் வேலைக்கு சென்று சம்பாதித்தது என்னுடைய தனிப்பட்ட பணமா அல்லது குடும்ப பணமா என்றால் குடும்ப பணமாகும். 1ம் பிரதிவாதிக்கு நகைமதிப்பீட்டாளர் என்ற முறையில் வந்த வருமானம் அவருடைய தனிப்பட்ட வருமானம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வருமானவரி கணக்கு சமர்பித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது, சமர்பித்திருக்கலாம். அந்த கணக்கில் அவருடைய வருமானத்தை தனிப்பட்ட வருமானமாக காட்டியுள்ளார் என்றால் அது அவர் தனிப்பட்ட விருப்பமாகும். பி அட்டவணை சொத்துக்கு 1ம் பிரதிவாதி பெயரில் 12.11.1981ம் தேதி லைசன்ஸ் பெறப்பட்டது என்றால் சரிதான். அது குடும்பசொத்தாகும். அது நகை செய்வதற்கான அனுமதி என்றால் சரிதான். பொற்கொல்லர் சேர்ந்தது. அந்த லைசென்ஸ் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட தொழில் செய்வதற்காக வழங்கப்பட்டது என்றும், குடும்பத்திற்காக வழங்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. அதேமாதிரி அது தொடர்ந்து அவர் தனிப்பட்ட முறையில் தொழில் செய்வதற்காக உரிமம் நீட்டிப்பு செய்யப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. பி அட்டவணை கடையானது குடும்ப சொத்து அல்ல என்றும், அது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வியாபாரம் என்றால் சரியல்ல. பி அட்டவணை கடை நடந்து வரும் இடம் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த வாடகையை 1ம் பிரதிவாதி பெயரில் இந்துசமய

அறநிலையதுறைக்கு தனிப்பட்ட முறையில் செலுத்திவருகிறார் என்றால் சரியல்ல. கூட்டுகுடும்பத்தில் இருந்து செலுத்தப்படுகிறது. வாடகை ஒப்பந்தம் மற்றும் ரசீது 1ம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்ட முறையில் உள்ளது என்றால் சரியல்ல. அது 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த கடை 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட தொழில் என்றும், மேற்படி வருமானத்தை தனிப்பட்ட வருமானமாக வருமானவரி கணக்கில் காட்டி தாக்கல் செய்துள்ளார் என்றும், நான் கூறுவதுபோன்று கூட்டுகுடும்ப சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.